செய்தி வெளியீடு எண் : 192 நாள் : 28.01.2023

**இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாடு, சிறப்புத் திட்டச் செயலாக்கம், வறுமை ஒழிப்பு மற்றும் ஊரகக் கடன் திட்டங்கள் தொடர்பான ஆய்வுக்கூட்டம் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாடு, சிறப்புத் திட்டச் செயலாக்கம், வறுமை ஒழிப்பு மற்றும் ஊரகக் கடன் திட்டங்கள் தொடர்பான ஆய்வுக்கூட்டம் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் இன்று (28.01.2023) நடைபெற்றது.

**இக்கூட்டத்தில் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசியதாவது:**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் எங்களிடம் அடிக்கடி அறிவுரை கூறுவது என்னவென்றால் ஒருத்திட்டத்தை தொடங்கி வைப்பது மட்டும் அல்லாமல் முறையாக பயனாளிகளிடம் சென்றடைகிறதா என்பதை கண்காணிக்க வேண்டும் என்பதாகும். அதன் அடிப்படையில் மாவட்டங்களுக்கு சுற்று பயணம் மேற்கொள்ளும் போது வளர்ச்சித் திட்டப்பணிகள் குறித்து ஆய்வு கூட்டம் நடத்தப்பட்டு வருகிறது. அந்த வகையில் இன்றைய தினம் நாமக்கல் மாவட்டத்தில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாடு, சிறப்புத் திட்டச் செயலாக்கம், வறுமை ஒழிப்பு மற்றும் ஊரகக் கடன் திட்டங்கள் தொடர்பான ஆய்வுக்கூட்டம் நடைபெறுகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திட்டங்களை அறிவித்தாலும் அதனை முழு அளவில் செயல்படுத்திட அரசு அலுவலர்களின் ஒத்துழைப்பு மிகவும் இன்றியமையாதது ஆகும். பள்ளிக்கல்வித் துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளில் நடைபெற்று வரும் பணிகளை நிர்ணயிக்கப்பட்டுள்ள காலத்திற்குள் முடித்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் என மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்கள் பேசினார்.

இதனைத்தொடர்ந்து நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டு போட்டிகளை மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.

முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகள் நாமக்கல் மாவட்டத்தில் மாவட்ட / மண்டல அளவில் நடைபெறவுள்ளது. போட்டிகள் பள்ளி, கல்லூரி மாணவ / மாணவியர், பொதுமக்கள், அரசு ஊழியர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் ஆகிய ஐந்து பிரிவுகளில் ஆண் / பெண் இருபாலருக்கும் மாவட்ட அளவில் 42 வகையானப் போட்டிகளும், மண்டல அளவில் 8 வகையான போட்டிகளும் என 50 வகையான போட்டிகளும் நடைபெறவுள்ளது. அதன்படி இன்றைய தினம் நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டு போட்டிகள் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.

இந்த ஆய்வு கூட்டத்தில் மாண்புமிகு வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் அவர்கள், பாராளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் திரு.கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் அவர்கள், நாமக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.எ.கே.பி.சின்ராஜ் அவர்கள், நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் திரு.பெ.இராமலிங்கம் அவர்கள், சேந்தமங்கலம் சட்டமன்ற உறுப்பினர் திரு.கு.பொன்னுசாமி அவர்கள், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அரசு கூடுதல் தலைமைச்செயலாளர் முனைவர்.அதுல்யா மிஸ்ரா, இ.ஆ.ப., அவர்கள், சிறப்பு செயலாக்கத் திட்டத்தின் அரசு சிறப்பு செயலர் திரு.எஸ்.நாகராஜன் இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர் மரு.கா.ப.கார்த்திகேயன் இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஸ்ரேயா பி. சிங்., இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட கண்காணிப்பாளர் திரு.ச.கலைச்செல்வன் இ.கா.ப., அவர்கள், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.மு.மணிமேகலை, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.சிவக்குமார் அவர்கள் ஆகியோர் உள்ளனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in